# DEPOSITION OF WITNESS

## (Chapter XXV BNSS)

## IN THE COURT OF JUDICIAL MAGISTREATE NO.I,MANNARGUDI

## ST.C.No. 753/2024 P.W. 1

**நாள் 29.10.2025**

பெயர் . ராஜா, த/பெ. சுப்ரமணியன்

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. எனக்கு தற்போது வயது என்னவென்றால் 49 ஆகும். எனது தற்போதைய குடியிருப்பு முகவர் என்னவென்றால் 12 சி டெப்போ ரோடு மன்னார்குடி ஆகும். நான் என்ன படித்துள்ளேன் என்றால் 3-ம் வகுப்பு வரை படித்துள்ளேன். என்ன தொழில் செய்து வருகிறேன் என்றால் மீன்குட்டை கமிஷன் வியாபாரம் செய்து வருகிறேன். தற்போது எந்த குட்டையை ஏலம் எடுத்துள்ளேன் என்றால் திருத்துறைப்பூண்டி ரோட்லுள்ள ஒரு குளம், தற்போது 4 மாதமாக எந்த குட்டையையும் ஏலம் எடுக்கவில்லை. இதுமட்டும் அல்லாமல் வேறு என்ன தொழில் செய்து வருகிறேன் என்றால் குத்தகைக்கு பயிர் செய்துவருகிறேன். எனது கைபேசி எண் என்னவென்றால் 9688882007 ஆகும். எந்த கம்பெனி என்றால் ஏர்டெல். ஒரு எண் தான் என்னிடம் உள்ளதா என்றால் ஆமாம். நான் இதுவரை வருமான வரி கட்டியுள்ளேனா என்றால் இல்லை.

2. தற்சமயம் நான் கைபேசி எடுத்து வந்துள்ளேனா என்றால் எடுத்து வந்துள்ளேன். என்னுடைய போனை பார்த்து எதிரியின் நம்பரை சொல்லமுடியுமா என்றால் சொல்லமுடியும். சாட்சி போனை பார்த்து எதிரியின் நம்பர் 9865609656 என்று சொல்கிறார். எதிரி எனது நல்ல நண்பர் என்று எனது அறிவிப்பிலும், புகாரிலும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எதிரிக்கு எத்தனை பசங்க என்றால் 2 பசங்க. நீதிமன்றத்திற்கு வெளியே உள்ள ஒரு நபரை காட்டி அது யார் என்று கேட்டபோது எதிரியின் மகன் என்று சாட்சி கூறுகிறார். நீதிமன்றத்திற்கு வெளியே நிற்கும் எதிரியின் மகனை எப்படி தெரியும் என்றால் சமுதாய ரீதியான கூட்டத்திற்கு செல்லும்போது தெரியும். என்ன சமூகம் என்றால் பிள்ளைமார் முதலியார் கவுண்டர் ஆகிய சமூகத்தின் மாநில நிர்வாகி என்ற முறையில் நான் கூட்டத்திற்கு செல்வேன்.

3. நீதிமன்றத்திற்கு வெளியே நிற்கும் எதிரியின் பையன் பெயர் தெரியுமா என்றால் பெயர் தெரியாது. எதிரியின் மற்றொரு மகன் பெயர் தெரியுமா என்றால் அதும் தெரியாது. எதிரி எந்த வகுப்பை சேர்ந்தவர் என்றால் முதலியார் சமூகத்தை சேர்ந்தவர். முதலியாரில் எந்த உட்பிரிவினை சேர்ந்தவர் என்று தெரியுமா என்றால் தெரியாது. ஆனால் சாட்சி மீண்டும் 2000 உட்பிரிவுகள் உள்ளது. அதில் செங்குந்தமுதலியார் என்ற பிரிவினை சார்ந்தவர் என்று கூறுகிறார். கடைசியாக எந்த ஊரில் கூட்டம் நடந்தது எந்த ஊர் என்றால் கரூர். எந்த தேதியில் நடந்தது என்றால் செப்டம்பர் 5-ம் தேதி 2025 வருடம் ஆகும்.

4. எதிரியின் சொந்த ஊர் எது என்றால் தாரமங்கலம் ஆகும். எதிரி திருமணமாகி வாழ்ந்த ஊர் எது என்று தெரியுமா என்றால் எனக்கு தாரமங்கலத்தில் தான் அறிமுகம். எப்போதிலிருந்து அறிமுகம் யார் மூலமாக அறிமுகம் என்றால் எங்கள் சமூக நிர்வாக ராஜ்குமார் என்பவர் மூலம் அறிமுகம். கடந்த 5 ஆண்டுகளுக்கு முன்பு அறிமுகம். கடந்த 5 ஆண்டுகளாக நான் எத்தனை முறை எதிரியிடம் பேசியுள்ளேன் என்றால் 10 முறை பேசியுள்ளேன். எதிரியின் தோட்டம் எங்குள்ளது என்று தெரியுமா என்றால் தெரியாது. எதிரியின் இல்லத்திற்கு எப்போதாவது சென்றுள்ளேனா என்றால் இல்லை.

5. எதிரியின் குடும்பத்தில் நல்லது கெட்டதில் நான் 5 ஆண்டுகளில் எதாவது கலந்து கொண்டுள்ளேனா என்றால் இல்லை. நான் பேஸ்புக், வாட்சப் இன்ஸ்டாகிராம் ஆகியவற்றை நான் பயன்படுத்துகிறேனா என்றால் பயன்படுத்துகிறேன். எனது கைப்பேசியை எடுத்து எனது வாட்சப்பில் இருந்து எதிரிக்கு எப்போதாவது வாட்சப் மூலமாக Hai என்று Message அனுப்பியுள்ளேனா என்றால் இல்லை. எதிரி லேடி என்பதால் அவ்வாறு அனுப்பவில்லை. முகநூல் மற்றும் இன்ஸ்டாகிராம் ஆகியவற்றில் எதிரி எனக்கு நண்பராக உள்ளாரா என்றால் எனக்கு தெரியவில்லை. இதுவரை எதிரிக்கு நான் பேஸ்புக், வாட்சப் இன்ஸ்டாகிராம் ஆகியவை மூலமாக இதுவரை ஏதேனும் message அனுப்பியுள்ளேனா என்றால் எனக்கு message அனுப்ப தெரியாது. நான் படிக்கவில்லை.

6. நீதிமன்றத்திற்கு வெளியே நிற்கும் நபர் ரோஹன் த/பெ. ராஜகோபால் என்பவர் எதிரியின் மகனே கிடையாது என்றால் எதிரி சொன்னதுதான். எனக்கு நேரடியாக தெரியாது. கடந்த 16.04.2023, 21.05.2023, 24.09.2023 ஆகிய 3 தேதிகளில், முறையே 6 இலட்சம், 7 இலட்சம், மீண்டும் 6 இலட்சம் கொடுத்ததாக சொல்லியுள்ள நிலையில், 3 பணத்தையும் எனது வீட்டில் வைத்து கொடுத்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். இந்த பணம் பட்டுவாடா பண்ணுவதற்கு என்னிடம் வங்கியிலோ வேறு வகையிலோ கொடுக்க வாய்ப்பு இல்லை என்றால் வங்கியில் பணம் இல்லை. ஆனால் நான் பல்வேறு வழிகளில் Rotation செய்து அதன்மூலம் கொடுத்தேன்.

7. நான் சொன்ன 3 தேதிகளிலும் எதிரி தாரமங்கலத்தை விட்டு வெளியில் செல்ல வாய்ப்பு இல்லை என்றாலும், அவர் ஆசிரியராக பணிபுரிந்து வருகிறார் என்றாலும், அவர் மன்னார்குடிக்கே வரவில்லை என்றாலும் சரியல்ல. எனது சட்ட அறிவிப்பிலும், புகாரிலும் எதிரி கடந்த 01.03.2024 ஆம் தேதி பூர்த்தி செய்து காசோலை கொடுத்ததாக சொல்லியுள்ளது தவறு என்றால் சரியல்ல. எதிரி கொடுத்தாதாக சொல்லப்படும் காசோலையை தடயவியல் துறைக்கு அனுப்பி அதில் எழுதப்பட்டுள்ளது அவரது கையெழுத்து இல்லை என்றும், பரிசோதனைக்கு அனுப்ப எனக்கு எதுவும் ஆட்சேபணை உள்ளதா என்றால் இல்லை.

8. ஒப்பந்த உறவானது ஒரு நபர் கேட்டு, மற்றொரு நபர் அதனை ஒப்புக்கொண்டு அதன்பின்னர் ஏற்படும் என்றால் சரிதான். எனது சட்ட அறிவிப்பிலும், புகாரிலும் எதிரி எப்போது பணம் கேட்டார் என்றும், நான் எப்போது பணம் தயார் செய்தேன் என்றும், எப்போது பணம் கொடுத்தேன் என்றும் சொல்லவில்லை என்றால் சரியல்ல. தமிழ் எனக்கு படிக்க தெரியுமா என்றால் ஓரளவிற்கு தெரியும். (**பின்வரும் சங்கதிகளை என்னால் படிக்க முடியுமா என்றால் படிக்க**

**முடியும் என்று சொல்லி புகாரில் கண்ட சங்கதிகை படித்தார்.)** புகார்தாரரிடம் பெற்ற கடனை திரும்ப கொடுக்கும் விதமாக தனக்கு வங்கி கணக்குள்ள தாரமங்கலம் ஸ்டேட் பேங்க ஆப் இந்தியா வங்கி கிளையில் மாற்றத்தக்க காசோலையை ஒன்றை கடந்த 01.03.2024-ம் தேதியிட்டு ரூ.19,00,000/- (ரூபாய் பத்தொன்பது இலட்சம் மட்டும்) என தொகை குறிப்பிட்டு புகார்தாரர் பெயருக்கு வழங்கியுள்ளார் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். **(படித்து முடித்தார்.)** எங்கு வைத்து வழங்கினார் என்று நான் சொல்லவில்லை என்றால் சரிதான்.

9. நான் எதிரியிடமிருந்து காசோலை வாங்கியிருந்தால் எந்த இடத்தில் வாங்கினேன் என்று சொல்லியிருப்பேன் என்றாலும், நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. எனக்கு தீரன்செந்தில் என்பரை தெரியுமா என்றால் தெரியாது. எஸ்.கே. மூர்த்தியை தெரியுமா என்றால் தெரியாது. தர்மபுரி மாவட்டத்தில் ஏ பள்ளிபட்டி காவல் நிலையத்தில் முதல் தகவல் அறிக்கை எண்.17/2024 ச/பி.420,506 என்ற வழக்கில் பிராதான குற்றவாளியான தீரன்செந்தில் மற்றும் எஸ்.கே. மூர்த்தி ஆகியோர்கள் எதிரியை மோசடி செய்ததாக அந்த மோசடியில் இந்த காசோலையும் இடம்பெற்றுள்ளது என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது.

10) 10 முறை என்னிடம் பழகிய உறவிற்காக நான் ரூ.19,00,000/- பணம் கொடுத்திருக்க முடியாது என்றாலும், நான் சொல்வது மனித இயற்கைக்கு எதிரானது என்றாலும் சரியல்ல. நான் எதிரிக்கு 3 தவணைகளில் ரூ.19,00,000/- இலட்சம் பணம் கொடுத்தற்கு சாட்சியாக யாரேனும் வைத்து கொடுத்ததை நீதிமன்றத்தில் நிரூபணம் செய்யமுடியுமா என்றால் நான் சாட்சி யாரையும் வைத்து கொடுக்கவில்லை. நான் சமூக பொறுப்பில் இருந்ததால் கொடுத்தேன். எதிரி வழக்கு காசோலைக்கான வங்கி கணக்கை 5 ஆண்டுகளுக்கு முன்னரே Account Close செய்து விட்டார் என்றும், மேலும் காசோலை ஆவணமானது 2010-ம் வங்கியால் வழங்கப்பட்டது என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது.

11. ஆகையால் வழக்கு காசோலை சட்டத்தின் பார்வையில் நிலைக்கத்தக்கது அல்ல என்றால் அவர் திட்டமிட்டே என்னை ஏமாற்றி விட்டார். நான் எதிரி எனக்கு காசோலை கொடுத்தற்கான தேதி எதுவும் இல்லை என்பதால் இந்த புகார் சட்டப்படி நிலைகத்தக்கதல்ல என்றால் சரியல்ல. மேலும், வங்கியில் திருப்பி கொடுக்கப்பட்ட ரீட்டன் மெமோவில் வங்கியின் முத்திரையும், கையெழுத்தும் இல்லை என்பதால் இந்த புகார் சட்டப்படி நிலைகத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நான் எதிரிக்கு கடன் கொடுத்ததை ருசு செய்யக்கூடிய எவ்வித சங்கதிகளை எனது சட்ட அறிவிப்பிலோ, புகாரிலோ சொல்லவில்லை என்றால் சரியல்ல. எதிரி கொடுத்த எதிருரை நான் பார்த்துவிட்டு அதற்கு எந்த பதிலும் கொடுக்காததால் எதிரியின் எதிருரை என்னால் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

12. எதிரியானவர் எனது சங்கத்தில் உறுப்பினர் இல்லை என்றால் சரிதான். அவர் ஆசிரியர் பணி புரிவதால் சங்கத்தின் உறுப்பினர் கார்டு வழங்கப்படவில்லை. எதிரியானவர் சங்கத்தில் எந்த நிகழ்விலும் கலந்துக்கொள்ளவில்லை என்றால் அவர் ஆசிரியராக இருப்பதால் கலந்துக் கொள்ளவில்லை. எதிரியானவர் என்னை ஒருபோதும் சந்தித்ததே இல்லை என்றால் சரியல்ல.

எனது சட்ட அறிவிப்பிலோ, புகாரிலோ நிரூபண வாக்குமூலத்திலோ எதிரியுடன் நட்பு உறவுமுறை உள்ளது என்று சொல்லிக்கொள்ள எவ்வித சங்கதிகளும் இல்லை என்றால் சரியல்ல. எனது சட்ட அறிவிப்பிலோ, புகாரிலோ நிரூபண வாக்குமூலத்திலோ எதிரியுடன் பரிவர்த்தனை செய்தற்காக நட்பு முறை கொண்டதற்காக எந்த ஒரு இடம், பொருள், காலம் குறிப்பிடபடாததால் இந்த வழக்கு சட்டத்தின் பார்வையில் நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. இந்த வழக்கு பொய்யான வழக்கு என்றால் சரியல்ல.

Sd/--J. Tamizhmurugan,
Judicial Magistrate No.I,
Mannargudi